கல்வி உயர்கல்வி அமைச்சு,
அமைச்சின் சுற்றுறிக்கை இல. 1995/36

எனது இல. இநிக/32
இடைநிலைக்கல்விப் பிரிவு ,
கல்வி உயர்கல்வி அமைச்சு,
""இசுருபாய"", பத்தரமுல்ல.
1995 டிசெம்பர் மாதம் 14 ஆந்திகதி

மாகாணக் கல்விச் செயலாளர்களர்,
மாகாணக் கல்விப் பணிப்பாளர்

<u>க. பொ. த. ( சா. த )</u>
<u>புதிய தொழிநுட்பப்பாடத்திட்டம்</u>

1996 ஆம் வருடத்துக்கான க. பொ. ( சா. த ) பாடநெறியினை ஆரம்பிக்கும் மாணவர்க்கான ( ஆண்டு 10) திருத்திய பாடத்திட்டம் நடைமுறைப்படுத்துதற்கெனப் பாடசாலை அதிபர்களினால் தத்தமது பாடசாலைகளுக்குப் பொருத்தப்பாடான பாடநெறியையோ அன்றிப் பாடநெறிகளையோ தெரிந்தெடுத்து அப்பாடநெறிகளுக்குரிய பாடத்திட்டத்தைக் கைக் கொண்டு கற்பித்தற்குரிய வழிவுகைகளை மேற்கொள்ளுதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் வேண்டும்.

02. 1997 ஆம் வருடத்தில் முதன் முறையாக க. பொ. த. ( சா. த ) க்குத் தோற்றும் மாணவர்கள் இந்தப்புதிய பாடத்திட்டத்துக்கு அமையவே பரீட்சிக்கப்படுவர் எவ்வாறாயினும் பழைய பாடத்திட்டத்துக்கு அமையத் தோற்றுவோரும் பழைய பாடத்திட்டத்துக்கு அமைவாகவே பரீட்சிக்கப்படுவர்

03. திருத்தப்பட்ட பாடங்களும் புதிய பாடங்களும் கீழே தரப்பட்டுள்ளன.

<u>விவசாயத்துறை</u>

3.1 விவசாயம்
32 தோட்டப்பராமரிப்பு
33. விலங்குப் பராமரிப்பு
3.4. தண்ணீர் உயிர்வள தொழில் நுட்பம்
35 கடல் நீர் உயிர்வள தொழில் நுட்பம்
3.6 உணவும் விஞ்ஞானமும் தொழில் நுட்பம்

<u>கைத்தொழிலும் தொழில் நுட்பத்துறையும்</u>

3.7 நிர்மாண தொழில் நுட்பம்
3.8 இயந்திர தொழில் நுட்பம்
3.9 நுண்கலை
3.10 மின் இலத்திரன் தொழில் நுட்பம்

மனைப் பொருளியற்துறை

3.11 மனைப் பொருளியல்

04. வர்த்தகவியற்துறையைச் சேர்ந்த பாடங்களை வர்த்தகமும் கணக்கியலும் பாடநெறியுடன் சுருக்கெழுத்தும் தட்டெழுத்தும் என்னும் பாடநெறியும் திருத்தியமைக்கபபட்டுள்ள பாடத்திட்டத்தில் ஒருவித மாற்றத்துக்கும் உள்ளாகாத படியால் ஏற்கனவே உள்ள பாடத்திட்டமே தொடர்ந்தும் பின்பற்றப்படும்.

05. மேற்படி 03 இல் தரப்பட்டுள்ள சகல பாடநெறிகளுக்கும் உரிய செயன்முறைகள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு 1997 ஆம் வருடத்துக்கான க. பொ. த ( சா. த ) பரீட்சையிற் செயன்முறைப்பரீட்சையும் இடம்பெறும்.

06. தங்கள் பாடசாலையிலுள்ள தற்போதைய் தொழில் நுட்ப ஆசிரியர்களையும் கைவசமுள்ள உபகரணங்களையும் வேலைக்கூட வசதிகளையும் விவசாயப்பிரிவையும் கவனத்திற்கொண்டு அவற்றிலிருந்து உச்சமான பயனைப் பெறுமாறு தொழில்நுட்பப் பாடநெறிகளைத் தெரிந்தெடுத்தற்கெனத் தங்களில் விசேட கவனத்தை ஈர்க்கின்றேன். தொழிநுட்பப் பாடநெறியினைத் தேர்ந்தெடுத்தற்குத் தங்களுக்கு உதவும் விதத்தில் இங்கு இணைப்பு இத்துடன் சேர்த்து அனுப்பப்படுகிறது.

ஒ / இ. எம். டீ. டீ. பீரிஸ்
செயலாளர்,
கல்வி, உயர்கல்வி அமைச்சு,

யு. எம். அபேவர்தன
பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகம்
(இடை நிலைக்கல்வி)

பிரதிகள் : 1) பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்
2) ஆணையாளர் நாயகம் - பரீட்சைத் திணைக்களம்
3) ஆணையாளர் - நூல் வெளியீட்டுத் திணைக்களம்
4) தலைவர் - தேசிய கல்வி ஆணைக்குழு

## புதிய தொழிநுட்பப் பாடத்திட்டம்

தற்பொழுது நாடெங்குமுள்ள பாடசாலைகளில் பதினைந்து தொழிநுட்பப் பாடநெறிகள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. (1991/41 ஆம் இலக்க சுற்றுநிருபம் ) மேற்படி சுற்றுநிருபத்திற் குறிப்பிட்ட வர்த்தகமும் கணக்கியலும் பாடநெறியுடன் சுருக்கெழுத்துடன் தட்டெழுத்துப் பாடநெறிக்கும் திருத்தமெதுவுஞ் செய்யப்படவில்லை. ஏனைய பாடகநெறிகள் 13 உம் திருத்தியமைக்கப்பட்டுள்ளதோடு புதிய பாடநெறிகளும் தரப்பட்டுள்ளன. பாடநெறியினைத்தெரிவு செய்யும் வேளையில் பாடசாலையிலுள்ள வளங்களைக் கவனத்திற் கொள்ளல் வேண்டும் தொழிநுட்ப பாடத்தைத் தேர்ந்தெடுத்தற்கு உதவும் விதத்திலே பாடத்திட்டத்திலுள்ள முக்கியதலைப்புக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

### புதிய தொழிநுட்பப் பாடநெறிகள்

01. விவசாயத்துறை

1.1 விவசாயம்

- விவசாயத்துக்கான அடிப்படை அறிவு
- பயிர்ச்செய்கை
- ஏற்றுமதி விவசாயப் பயிர்ச்செய்கை
- விலங்குப்பராமரிப்பு அடிப்படை அறிவு
- போஷாக்கியல் உணவு மற்றும் விவசாய உற்பத்திப் பாதுகாப்பு
- விவசாயத்தினால் சூழலுக்கு ஏற்படும் தாக்கமும் சாதகபாதக விளைவுகளும்

1.2 தோட்டவியல்

- விவசாய அடிப்படை அறிவு
- நாற்றுமேடை பராமரிப்பு
- தாவரஇன விருத்தி
- பூவுக்கும் அலங்காரத்துக்குமான பயிர்ச்செய்கை
- வீட்டுத் தோட்டம் அமைத்தல்
- தேனீ வளர்த்தல்

தோட்டப்பராமரிப்பும் சூழல் பாதுகாப்பும்

13 விலங்குப் பராமரிப்பு

- விவசாய அடிப்படை அறிவு
- விலங்குப்பராமரிப்பு அடிப்படை அறிவு
- கோழி வளர்த்தல்
- மற்றும் வளர்ப்பு

14 கடல்உயிர் வளத்தொழில் நுட்பம்.

- கடல் உயிர்வளப் பொருளாதாரமும் சமூகமுக்கியத்துவம்
- கடல் உயிர்வளத்தைப் பாதிக்கும் காரணிகள்
- கடல் தாவரவளம்
  - மீன் மச்சவகைதவிர்ந்த கடல் விலங்கு வளங்கள், விலங்கு வளங்கள்
  - மனிதவளங்கள்
  - இலங்கையின் கடல் உயிரின கைத்தொழில் உற்பத்தியும் விற்பனையும்
  - தொழில்நுட்ப முறைகளும் உபகரணங்களும்
  - சம்பந்தப்பட்டசிறு கைத்தொழிலும் உபஉற்பத்திப் பொருட்களும்

15. நன்னீர் உயிர்வளத்தொழில் நுட்பம்

- நன்னீர் உயிர்வளக் கைத்தொழிலின் பொருளாதாரப் பெறுமானம்
- மீன் வளங்கள்
- நீர்த்தாவர வளங்கள்
- மீன் வாழும் இடங்கள்
- மீன் வளர்த்தல்
- மீன் நோய் பரவுதலும் அவற்றைத் தடுத்தலும்
- மீன் உற்பத்தியும் அவற்றுக்கான உபகரணங்களும்
- மீன் பாவனையும் சேமித்து வைத்தலும்
- அழகுக்குரிய மீன்களும் கண்கவர் நீர்த்தாவரங்களும்

1.6. உணவியலும் தொழில் நுட்பமும்

- இலங்கையிற் காணப்படும் போஷாக்குக் குறைபாட்டுநிலை
- உலக சனத்தொகையும் உணவுப் பிரச்சனையும்
- விவசாயமும் விலங்குப் பராமரிப்புக்கான அடிப்படைத்தத்துவங்களும்
- விளைச்சலும் விளைச்சலைப்பாதிக்கும் காரணிகளும்.
- உணவு பழுதடைவதற்கான காரணங்கள்
- உணவைப்பாதுகாக்கும் வழிமுறைகளும் செயற்பாடுகளும்

02. கைத்தொழிலும் தொழில் நுட்பத்திறன் துறையும்

2.1 நிர்மாணத் தொழில் நுட்டம்

- மரவேலை
- கட்டிடத் தொழில்
- கேத்திரகணிதம்பொறிமுறை வரைதல்

2.2 இயந்திரவியல் தொழில் நுட்டம்

- உலோகக் கைத்தொழில்
- மோட்டார் தொழில் நுட்பக்கலை
- கேத்திரகணிதம் பொறிமுறை வரைதல்

2.3 நுண்கலை

- நெசவு
- செரமிக் தொழில் நுட்பம் ( களிமண் நுண்கலை)
- அலங்காரக் கைவேலை
- கேத்திரகணிதம், பொறிமுறை வரைதல்

2.4 மின் இலத்திரன் இயல் தொழில் நுட்பம்

- மின்சாரம்
- வானொலி தொழில் நுட்பக்கலை
- இலத்திரன் தொழில் நுட்பம். கேத்திரகணிதம் பொறிமுறை வரைதல

03 மனைப்பொருளியல் துறை

3.1 மனைப் பொருளியல்

- மனை நிர்வாகம்
- உணவும் போஷாக்கும்
- புடவைத் துணியும் ஆடைதைத்தலும்
- சிறார் முன்னேற்ற அபிவிருத்தி

மேற்கண்ட புதிய பாடத்திட்டங்கள் தேசியக்கல்வி திருவகத்தினூடாக வழங்கப்படும்